விலை: 50.00
பக்கங்கள் - 12
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 345 வள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகை 13 சனிக்கிழமை (29.11.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

வட மாகாணத்துக்கு பேராபத்து

# கனத்த மழையுடன் பலத்த காற்று வீசும்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் இன்று கனத்த மழையுடன் பலத்த காற்று வீசும் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது. மேலும் வடக்கில் சில இடங்களில் 200 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி பதிவாகும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. (02ஆம் பக்கம் பார்க்க)

அனர்த்த நிவாரணத்துக்கு

## 1.2 பில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

அனர்த்த நிவாரண சேவைகளுக்காக 1.2 பில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஜனாதி 11ஆம் பக்கம் பார்க்க

மறு அறிவித்தல்வரை

## உயர்தரப் பரீட்சை ஒத்திவைப்பு

(கொழும்பு)

நாட்டைப் பாதித்துள்ள மோசமான வானிலை காரணமாக, உயர்தரப் பரீட்சை உள்ளிட்ட அனைத்துப் பரீட்சை 11ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் பல இடங்களில்

தொலைபேசி வலையமைப்புகள் செயலிழப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் பல இடங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தொலைபேசி அழைப்புகள் செயலிழந்துள்ளன. 11ஆம் பக்கம் பார்க்க

வவுனியா – நொச்சிமோட்டையுடன்

## ஏ9 வீதிப் போக்குவரத்து முழுமையாகத் தடை



11ஆம் பக்கம் பார்க்க

# டிட்வா சூறாவளியால் 88 பேர் உயிரிழப்பு

85 பேர் காணாமல் போயுள்ளனர்
2 இலட்சத்துக்கு அதிகமானோர் பாதிப்பு

(கொழும்பு)

டிட்வா சூறாவளியால் ஏற்பட்ட மோசமான வானிலையைத் தொடர்ந்து 88 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 85 பேர் காணாமல்போயுள்ளதாகவும் பேரிடர் மேலாண்மை மையம் தெரிவித்துள்ளது.
(02ஆம் பக்கம் பார்க்க)

## இந்தக் கடினமான சூழ்நிலையில் ஒன்றிணைந்து செயற்படுவோம்



ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

(கொழும்பு)

“இந்தக் கடினமான சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட மக்களின் உயிர்களைப் பாதுகாக்கவும், அவர்களுக்குத் தேவையான நிவாரணங்களை வழங்கவும் நாம் அனை 11ஆம் பக்கம் பார்க்க

மனிதாபிமான அவசர

## நிவாரணப் பொருட்களுடன் இந்தியக் கடற்படைக் கப்பல்கள்





11ஆம் பக்கம் பார்க்க

சீரற்ற வானிலையால்

## மரணித்தவர்களுக்கு மோடி இரங்கல்

(புதுடில்லி)



டிட்வா புயலின் காரணமாக தங்கள் அன்புக்குரியவர்களை இழந்த இலங்கையர்களுக்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி, ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

தனது ‘எக்ஸ்” சமூக வலை 11ஆம் பக்கம் பார்க்க

சீரற்ற காலநிலை

## யாழில் ஒருவர் உயிரிழப்பு

4140 பேர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக ஒருவர் உயிரிழந்ததுடன் 02ஆம் பக்கம் பார்க்க

மோசமான வானிலை

## நாட்டின் பல பகுதிகளில் மின்சாரம் துண்டிப்பு


(கொழும்பு)

நிலவும் மோசமான வானிலை காரணமாக நாட்டில் கிட்டத்தட்ட 25% பகுதிக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் ஷெரலி குமார தெரிவித் 11ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மொரகஹகந்த பாலம் வெள்ளத்தில் இடிந்து வீழ்ந்தது



(மாத்தளை)

தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக, நாட்டின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

வெள்ளத்தின் வேகம் காரணமாக, மாத்தளை - மொரகஹகந்த லக்கல பாலமும் இடிந்து விழுந்துள்ளது.

மேலும் முச்சக்கர வண்டிகள், பேருந்துகள் மற்றும் கார்கள் உள்ளிட்ட வாகனங்களும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு, வானிலை ஆய்வுத் துறை மற்றும் பாதுகாப்புப் படையினர், பொதுமக்கள் முடிந்தவரை பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறும் விபத்து நடந்த இடத்தைப் பார்வையிடுவதைத் தவிர்க்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ம-7)

### வவுனியா ஏ9 வீதியில் அனர்த்தம்

## வெள்ளத்தில் மூழ்கிய கார் இருவர் சடலமாக மீட்பு

(வவுனியா)

வவுனியா, சாந்த சோலை ஏ9 வீதியில் நீரில் அடித்துச் சென்ற நிலையில் கார் ஒன்று மீட்கப்பட்டுள்ளதுடன், அதன் உள்ளே இருந்து இரு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

ஏ9 வீதி சாந்த சோலை சந்திக்கு அருகாமையில் நேற்று இரவு இடம்பெற்ற குறித்த சம்பவம் பற்றித் தெரியவருதாவது,

ஏ9 வீதி சாந்த சோலை சந்திக்கு அருகாமையில் கார் ஒன்று அடித்து செல்லப்பட்டுள்ளதை அவதானித்த கிராம மக்கள், பொலிஸார் மற்றும் இராணுவத்தினருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

குறித்த தகவலினை அடுத்து சம்பவ இடத்திற்கு வந்த இராணுவம் மற்றும் பொலிஸார் கிராம இளைஞர்களுடன் இணைந்து குறித்த காரினை மீட்டுள்ளனர்.

இதன்போது காரினுள் பயணித்த ஆண் மற்றும் பெண் இருவரது சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன. (ம-7)

## கனத்த...

அதேநேரம் வடமத்திய, மத்திய, வடமேல் சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களிலும் திருகோணமலை, பதுளை, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகளில் 150 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இந்தத் தொடர் மழைவீழ்ச்சி காரணமாக வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு அபாயங்கள் அதிகரிக்க வாய்ப்புள்ளதால், தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் மிகவும் அவதானத்துடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், டிட்வா புயல் தொடர்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியல் பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா நேற்று மாலை விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அவ் அறிக்கையில்,

திருகோணமலையின் குச்சவெளியில் மையம் கொண்டுள்ள டிட்வா புயல் வடக்கு, வடமேற்குத் திசையில் நகர்ந்து வருகின்றது. இது எதிர்பார்த்த வேகத்தில் நகரவில்லை. தற்போது மணிக்கு 5 கிலோமீற்றர் வேகத்திலேயே நகருகின்றது.

டிட்வா புயலின் மையப்பகுதி இன்று 29 ஆம் திகதி காலை வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளத்துக்கு அண்மையாகக் கடலுக்குச் செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது. நகர்வு வேகம் குறைவாக உள்ளமையால் கரையைக் கடக்கும் நேரமும் தாமதமாகும்.

அதனால் இன்று வடக்கு மாகாணத்தின் சில பகுதிகளுக்கு அவ்வப்போது மிதமானது முதல் கன மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களுக்கு தற்போது கிடைத்து வரும் கனமழை இரவு 2.00 மணிவரை (29.11.2025) நீடிக்கும் வாய்ப்புள்ளது. காற்றின் வேகமும் வடக்கு மாகாணத்தில் படிப்படியாக அதிகரிக்கும்.

ஆகவே வடக்கு மக்கள் மிக அவதானமாக இருக்குமாறு வேண்டப்படுகிறார்கள். குறிப்பாக தாழ்நிலப் பகுதிகளில் உள்ள மக்கள் மிகுந்த அவதானமாக இருப்பது அவசியம். வெள்ளநீர் அதிகரிக்கும் சந்தர்ப்பத்தினை உணர்ந்தால் முன்கூட்டியே உரிய அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு பாதுகாப்பான இடத்துக்குச் செல்வது சிறந்தது.

அதேவேளை வடக்கு மாகாணத்தின் கரையோரப் பகுதிகள் குறிப்பாக வடக்கு மாகாணத்தின் மேற்கு கரையோரப்பகுதிகள் மற்றும் தீவுப்பகுதிகளில் Storm Charge எனப்படும் கடல்நீர் குடியிருப்புக்களுக்குள் உட்புகுதல் செயற்பாடு இடம்பெறும். ஆகவே கரையோரப் பகுதி மக்கள் இது தொடர்பாகவும் அவதானமாக இருப்பது அவசியம்.

கடந்த சில நாட்களாக இலங்கையைப் புரட்டிப் போட்ட, இலங்கையின் காலநிலை வரலாற்றில் முன்னெப்போது இல்லாத அளவுக்கு மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்திய ஒரு வரலாற்றுத் துன்பியல் நிகழ்வுகளுக்கு காரணமான "டிட்வா" புயல் இன்றுடன் இலங்கையை விட்டு நீங்குகிறது என்றார். (ம-7)

### சீரற்ற காலநிலையால்

## போக்குவரத்து சேவைகள் முழுமையாக ஸ்தம்பிதம்

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களினால் போக்குவரத்து சேவைகள் முழுமையாக ஸ்தம்பிமடைந்துள்ளன.

கொழும்பில் இருந்து வடக்கு, கிழக்கு உட்பட தூர பிரதேசங்களுக்குமான பேருந்து சேவைகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் காலையில் இருந்து சகல புகையிரத சேவைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக புகையிரதத் திணைக் களம் அறிவித்துள்ளது. புகையிரதப் பாதைகளில் மண்மேடு சரிந்து விழல், மரங்கள் முறிந்து விழுதல் தீவிரமடைந்துள்ளதால் பயணிகளின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக புகையிரதத் திணைக்களத்தின் மேலதிக பொது முகாமையாளர் சந்திரசேன பண்டார தெரிவித்துள்ளார்.

அத்துடன் மறுஅறிவித்தல் விடுக்கும் வரையில் புகையிரதப் பொதிகள் விநியோக சேவைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் கொழும்பில் இருந்து காங்கேசன்துறை நோக்கிச் சென்ற புகையிரதம் அவசர-அனர்த்த நிலை காரணமாக குருநாகல் புகையிரத நிலையத்தில் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அதேபோல் காங்கேசன்துறை புகையிரத நிலையத்தில் இருந்து கொழும்பு கோட்டை புகையிரத நிலையம் நோக்கிச் சென்ற புகையிரதம் அநுராதபுரம் புகையிரத நிலையத்தில் இடைநிறுத்தப்பட்டுள்ளது. வெள்ளப் பெருக்குக் காரணமாக வடக்குக்கான புகையிரத சேவைகளும் முழுமையாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. (ம-7)

## டிட்வா...

சூறாவளியால் ஏற்பட்ட பேரிடர் சூழ்நிலையால் 61,175 குடும்பங்களைச் சேர்ந்த 219,282 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நாடு முழுவதும் 266 பாதுகாப்பு முகாம்கள் நிறுவப்பட்டுள்ளன. இதில் 5,890 குடும்பங்களைச் சேர்ந்த 18,443 பேர் தங்கியுள்ளனர்.

களனி, களு ஆறு, யான் ஓயா, மகாவலி, தெதுரு ஓயா, மஹா ஓயா, கலா ஓயா, அத்தங்லு ஓயா, மாணிக்க கங்கை, மல்வத்து ஓயா உட்பட பல முக்கிய ஆறுகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பதுளை மாவட்டத்தில் மாத்திரம் பேரழிவு காரணமாக 35 பேர் இறந்துள்ளதாக பதுளை மாவட்ட செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், கண்டி மாவட்டத்தில் மட்டும் இறந்தவர்களின் எண்ணிக்கை 50 ஆக உயர்ந்துள்ளதாகவும், மேலும் 67 பேர் காணாமல் போயுள்ளதாகவும் கண்டி மாவட்ட செயலாளர் தெரிவித்துள்ளார்.

கண்டியின் ஹசலகாவில் உள்ள யஹங்கல பகுதியில் ஏற்பட்ட மண்சரிவில் ஐந்து சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. மேலும் 12 பேர் காணாமல் போயுள்ளனர்.

மேலும், கேகாலையின் புலத்கோஹுபிட்டியவில் உள்ள தேதுகல பகுதியில் ஏற்பட்ட மண்சரிவில் 12 பேர் காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

## யாழில்...

இருவர் காயமடைந்துள்ளனர்.

மருதங்கேணி பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட பகுதியில் வெள்ள அனர்த்தம் காரணமாக அந்தோணி பெர்னாண்டோ (வயது 66) என்பவரே உயிரிழந்துள்ளார்.

அதேவேளை நெடுந்தீவு மற்றும் உடுவில் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் இருவர் காயமடைந்துள்ளனர்.

மேலும் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக 1297 குடும்பங்களைச் சேர்ந்த 4140 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்.

மேலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் 85 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்ததுடன் கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் ஒரு வீடு முழுமையாகச் சேதமடைந்துள்ளது. (ம-7,33)


## விண்ணக வாழ்வின் 31ம் நாள் நினைவஞ்சலி



நித்திய பிதாவே நீர் உம்முடைய சந்நிதானத்திற்கு அழைத்துக் கொண்ட எமது குடும்பத் தலைவி

**அமரர் இரத்தினசிங்கம் விமலாபத்மினி**

அவர்களின் ஆத்ம வேதனை விலகி நித்திய காலமாக உம்மை சந்தோஷமாக தரித்துக் கொண்டிருக்கிற பிதாவே கிருபை செய்தருளும் ஆமென்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இன்று 29.11.2025 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு புலோலி புனித சூசையப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். அந்நிகழ்விலும் நாளை 30.11.2025 (ஞாயிற்றுக்கிழமை) மதியம் 12.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

வாசிகசாலை வீதி,
புலோலி வடகிழக்கு, பருத்தித்துறை.

இங்ஙனம்: குடும்பத்தினர்
072 172 4480

(C-4445)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வான் பாயும் நிலையில் 36 குளங்கள்!

## வடக்கு மாகாண நீர்ப்பாசன பணிப்பாளர் எச்சரிக்கை

**(யாழ்ப்பாணம்)**

**வடக்கு மாகாணத்தில் பெய்து வரும் அடைமழை காரணமாக மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஆளுகைக்குட்பட்ட 36 குளங்கள் வான் பாயும் நிலையை அடைந்துள்ளதுடன், சில குளங்கள் உடைப்பெடுக்கும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளன.**



பொதுமக்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு அவசர முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் எந்திரி த.இராஜகோபு தெரிவித்தார்.

நேற்று வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் வெளியிடப்பட்ட நிலவர அறிக்கையின் முக்கிய விபரங்கள் வருமாறு:

மாங்குளம் மற்றும் வவுனியா பகுதிகளில் சடுதியான அதிக மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இரணைமடு குளத்தின் நீர்மட்டம் 26"-10" அடியை எட்டியுள்ளது. குளத்துக்கு வரும் நீரின் அளவு சடுதியாக அதிகரித்து வருவதால், குளத்துக்கு ஏற்படக்கூடிய அபாயத்தைத் தவிர்க்கவும், கீழ்ப்பகுதி வெள்ள அனர்த்தத்தைத் தவிர்க்கவும் நேற்று காலை 6 மணி முதல் 8 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

தற்போது மணித்தியாலத்துக்கு 6.281 மில்லியன் கன மீற்றர் நீர் குளத்துக்குள் வருகின்றது. நீர்மட்டம் 28"-6" அடியை அடைந்தால் எஞ்சிய 6 கதவுகளும் திறக்கப்படும்.

அதிக மழைவீழ்ச்சி காரணமாக வவுனியா மாவட்டத்திலுள்ள சில குளங்கள் உடைப்பெடுக்கும் நிலையை அடைந்துள்ளன: பம்பைமடு குளத்தில்: 34 அங்குல மேலதிக நீர் வான் பாய்ந்ததால், குளம் உடைப்பெடுக்கும் அபாயம் ஏற்பட்டது. இதனையடுத்து அணையைப் பாதுகாக்கவும் ஆபத்தைக் குறைக்கவும் வான் வழி வாய்க்காலுக்கான தடுப்பணையின் ஒருபகுதி வெட்டி விடப்பட்டது.

கனகராயன்குளம் மற்றும் அலியாமருதமடு: குளங்களும் உடைப்பெடுக்கும் அபாயத்தில் உள்ளதால், அவற்றின் வால் கட்டுப் பகுதிகள் மற்றும் அணைகளை வெட்டி நீரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

வவுனிக்குளம் மற்றும் தேறாங்கண்டல் குளம் என்பன வான் பாய்கின்றன.

முத்துஐயன்கட்டு குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

மொத்தமாக 54 நடுத்தர மற்றும் பாரிய குளங்களில் 36 குளங்கள் வான் பாய்கின்றன.

தண்ணிமுறிப்பு, மட வாளசிங்கம், மருதமடு, கனுக் கேணி ஆகிய குளங்களுக்கு உத்தியோகத்தர்கள் சென்றுள்ள போதிலும், தொலைத்தொடர்பு வலையமைப்பு துண்டிக்கப்பட்டுள்ளதால் தொடர்புகளைப் பேண முடியவில்லை எனப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (நி)

# விவசாய போதனா ஆசிரியர்களுக்கான திறந்த போட்டிப் பரீட்சைகள் இடைநிறுத்தம்

## வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை மற்றும் இயற்கைப் பேரிடர் காரணமாக, வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவால் நடத்தப்படவிருந்த பரீட்சைகள் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் திரு. ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் விவசாயப் போதனாசிரியர் தரம் III மற்றும் பயிற்சித் தரம் ஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைகள் இன்று சனிக்கிழமை மற்றும் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்தன.

எனினும், தற்போது நிலவும் சீரற்ற வானிலை மற்றும் இடர் நிலைமையை கருத்திற்கொண்டு, இப்பரீட்சைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

பரீட்சை நடைபெறும் புதிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என அவர் அறிவித்துள்ளார். (நி)

# மன்னார் - மதவாச்சி வீதிகளில் பயணிப்போர் கவனத்திற்கு...!

(மன்னார்)

மன்னார் தொடக்கம் மதவாச்சி வரையான வீதிகளில் வெள்ள நீர் காரணமாக அநேக இடங்களில் வீதி வெள்ள நீரால் தடைபட்டுள்ளது.

எனவே அப்பாதை ஊடாக பயணம் செய்வோர் பாதுகாப்பை உறுதிப்படுத்தி தங்கள் பயணங்களை மேற்கொள்ளுமாறு மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் கே.திலீபன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும் மல்வத்து ஓயாவின் நீர்மட்டம் (தேக்கம்) 16."9" அடியை தாண்டி உள்ளதாலும் நாச்சதுவ குளத்தின் பாதுகாப்பு கருதி மேலும் வான் கதவுகள் திறக்கப்பட இருப்பதனாலும் மல்வத்து ஓயா ஆற்றங்கரை ஓரத்தில் தாழ் நிலப்பகுதியில் இருப்போர் உடனடியாக பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (நி-285)

# வெள்ளத்தில் மூழ்கிய பேராதனைப் பல்கலை விடுதிகள்



(கண்டி)

நாட்டில் நிலவும் கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பல மாணவர் விடுதிகள் நீரில் மூழ்கியுள்ளதாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

நிலைமையின் தீவிரத்தைக் கருத்தில் கொண்டு, மறு அறிவித்தல் வரும் வரை பேராதனைப் பல்கலைக்கழகத்தை தற்காலிகமாக மூடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விடுதிகளில் தங்கியிருந்த மாணவர்கள் பற்றிய பாதுகாப்பு நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அனைத்து மாணவர்களும் தற்போது பாதுகாப்பாக இருப்பதாக ஆணைக்குழு உறுதிப்படுத்தியுள்ளது.

வெள்ளநிலை மேலும் மோசமடையாதபடி கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்கின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பொலிஸ் உத்தியோகத்தர்களின் விடுமுறைகள் ரத்து

(கொழும்பு)

நாட்டைப் பாதித்துள்ள மோசமான வானிலை காரணமாக அனைத்துப் பொலிஸ் அதிகாரிகளின் விடுமுறைகள் மற்றும் நாள் விடுப்புகள் இரத்து செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இது நாளை 30ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், உதவிப் பொலிஸ் அத்தியட்சகருமான எஃப். யூ. வுட்லர் தெரிவித்தார்.

தற்போதைய அனர்த்த நிலைமை காரணமாக, ஒரு அதிகாரி தான் நியமிக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையத்திற்குச் சேவைக்குச் சமூகமளிக்க முடியாவிட்டால், அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் சேவைக்குச் சமூகமளிக்குமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

இதேவேளை, அவசர அனர்த்த நிலைமைகளுக்காக 117, 119 என்ற அவசர அழைப்பு இலக்கங்கள், 1990 என்ற சுவசரிய சேவை, 110 என்ற தீயணைப்புப் பிரிவு, 113 என்ற இராணுவத் தலைமையகம், 116 என்ற விமானப்படைத் தலைமையகம் ஆகிய துரித எண்களை அழைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# ஹங்குராங்கெத்த உனுவின்னவில் மண்சரிவு 37 பேர் கடற்படையினரால் மீட்பு

(ஹற்றன்)



ஹங்குராங்கெத்த, மாஓய - கொஸ்லந்த, உனுவின்ன பகுதியில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கியிருந்த 37 பேரை இலங்கை கடற்படையின் மீட்புக் குழுக்கள நேற்று முன் தினம் வியாழக்கிழமை பாதுகாப்பாக மீட்டுள்ளனர்.

மாஓய உனுவின்ன கிராமத்திற்குச் செல்லும் வீதியில் மண்மேடு சரிந்து விழுந்ததால் 17 குடும்பங்கள் மண்சரிவில் சிக்கின.

சம்பவ இடத்திற்கு விரைந்த கடற்படை மீட்புக் குழுக்கள், உள்ளூர் மக்களின் உதவியுடன், 18 குழந்தைகள் உட்பட அனைவரையும் மீட்டு பாதுகாப்பான இடங்களுக்கு பத்திரமாக அழைத்துச் சென்றனர். (நி)

# யாழிலிருந்து கொழும்பு சென்ற பேருந்து வெள்ளத்தில் சிக்கியது

## உலங்குவானூர்தி மூலம் மீட்பு நடவடிக்கை

(புத்தளம்)

**புத்தளம் மாவட்டத்தின் ராஜாங்கனை பகுதியில், யாழ்ப்பாணத்திலிருந்து வந்த பேருந்து ஒன்று திடீரென ஏற்பட்ட பெருவெள்ளத்தில் சிக்கியுள்ளதாக புத்தளம் மாவட்ட செயலாளர் அறிவித்துள்ளார்.**



**வெள்ளநீர் அதி[illegible]மாக அதிகரித்த நிலையில் பயணிகள் உயிர் ஆபத்துக்குள்ளாகியதையடுத்து உடனடி மீட்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நிலைமையின் தீவிரத்தைக் கருத்தில் கொண்டு, பயணிகளைப் பாதுகாப்பாக மீட்க இலங்கை விமானப்படையின் பெல் 212 ரக உலங்குவானூர்தி அவசரமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தற்போது இராணுவம், விமானப்படை மற்றும் பொலிஸார் இணைந்து செயற்பட்டு, பேருந்தில் உள்ளவர்களை பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.**

**நாட்டின் பல பகுதியில் வெள்ளநிலை தொடர்ந்து மோசமடைந்து வருவதால், மக்கள் தேவையற்ற பயணங்களைத் தவிர்க்குமாறு அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (நி)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## தீராத சோகத்தில் இந்தியா; மண்டியிடவைத்த தென்னாபிரிக்கா

**இந்திய மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்க அணி 408 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.**



போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி தமது முதலாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 489 ஓட்டங்களைக் குவித்தது. துடுப்பாட்டத்தில் செனூரன் முத்துசாமி 109 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

இதனையடுத்து முதலாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 201 ஓட்டங்களை மாத்திரம் பெற்று சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

இதற்கமைய 288 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 5 விக்கெட்டுகளை இழந்து 260 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது.

இந்தநிலையில் இந்திய அணிக்கு 549 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இதன்படி 549 ஓட்டங்கள் எனும் இமாலய இலக்கை நோக்கி இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 140 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

இதற்கமைய தென்னாபிரிக்க அணி 408 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றியைப் பதிவு செய்துள்ளது.


அத்துடன் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை தென்னாபிரிக்க அணி 2-0 என்ற அடிப்படையில் கைப்பற்றியுள்ளது.

குறித்த வெற்றியைத் தொடர்ந்து தென்னாபிரிக்க அணி இந்திய மண்ணில் 25 ஆண்டுகளுக்குப் பிறகு டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

## உலகக்கிண்ண செஸ் போட்டி; உஸ்பெகிஸ்தான் வீரர் சம்பியன்

11 ஆவது உலகக் கிண்ண செஸ் தொடர் கோவாவில் நடைபெற்று வருகிறது. இதில் சீனாவின் வெய் யீ, உஸ்பெகிஸ்தானின் ஜவோகிர் சிந்தரோவ் இடையிலான இறுதிச் சுற்றின் முதலாவது ஆட்டம் சமனில் முடிவடைந்தது. இதன் 2 ஆவது ஆட்டமும் சமனில் முடிந்தது.

இந் நிலையில், வெற்றியாளரை தீர்மானிக்க டைபிரேக்கர் நடைபெற்றது.



இறுதிப்போட்டியின் டை பிரேக்கரில் சீன வீரர் வெய் யீயை உஸ்பெகிஸ்தான் வீரர் ஜவோகிர் வீழ்த்தி சம்பியன் பட்டம் பெற்றார். (3)

## முத்தரப்பு ரி-20 தொடரின் இறுதிப்போட்டியில் இலங்கை!

### இன்று பலப்பரீட்சை



பாகிஸ்தான், இலங்கை மற்றும் சிம்பாப்வே கிரிக்கெட் அணிகள் இடையிலான முத்தரப்பு ரி-20 தொடர் பாகிஸ்தானில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற 6 ஆவது லீக் ஆட்டத்தில் பாகிஸ்தான், இலங்கை அணிகள் மோதின. நாணய சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் பந்துவீச்சை தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 184 ஓட்டங்கள் எடுத்தது. தொடக்க ஆட்டக்காரர் கமில் மிஷ்ரா அதிரடியாக ஆடி 48 பந்தில் 76 ஓட்டங்கள் குவித்தார். குசால் மெண்டிஸ் 23 பந்தில் 40 ஓட்டங்கள் சேர்த்தார்.

இதையடுத்து, 185 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பாகிஸ்தான் களமிறங்கியது. கப்டன் சல்மான் ஆகா தனியாகப் போராடி அரை சதம் கடந்து 63 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். மற்ற வீரர்கள் நிலைத்து நிற்கவில்லை.

இறுதியில், பாகிஸ்தான் 20 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 176ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அணி திரில் வெற்றி பெற்றது.

இலங்கை அணியின் துஷ்மந்தா சமீரா 4 விக்கெட் வீழ்த்தி அசத்தினார். இலங்கை அணி தான் ஆடிய 4 லீக் போட்டிகளில் 2 இல் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. இன்று நடைபெறும் இறுதிப் போட்டியில் இலங்கை அணி பாகிஸ்தானுடன் மோதுகிறது. (3)

## பங்களாதேஷிற்கு எதிரான ரி-20 தொடரை வெற்றியுடன் தொடங்கிய அயர்லாந்து

பங்களாதேஷ் சென்றுள்ள அயர்லாந்து அணி 3 போட்டிகள் கொண்ட ரி- 20 தொடரில் பங்கேற்று விளையாடி வருகிறது.

இரு அணிகளுக்கு இடையிலான முதல் ரி-20 போட்டி சட்டோகிராமில் நேற்று முன்தினம் நடைபெற்றது. நாணய சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் பந்துவீச்சைத் தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட்டுக்கு 181 ஓட்டங்களை குவித்தது. ஹாரி டெக்டர் சிறப்பாக ஆடி அரை சதமடித்து 69 ஓட்டங்கள் எடுத்தார். டிம் டெக்டர் 19 பந்துகளில் 32 ஓட்டங்கள் குவித்தார்.

பங்களாதேஷ் சார்பில் டம்ஜிம் ஹசன் 2 விக்கெட் எடுத்தார்.

தொடர்ந்து ஆடிய பங்களாதேஷ் அணியில் முன்னணி வீரர்கள் யாரும் நிலைத்து நிற்கவில்லை. தவ்ஹித் கிரிடோய் தனி ஆளாகப் போராடினார். அவர் 50 பந்தில் 83 ஓட்டங்கள் குவித்தார்.

இறுதியில், பங்களாதேஷ் அணி 20 ஓவரில் 9 விக்கெட்டுக்கு 142 ஓட்டங்களை மட்டும் எடுத்தது. இதன்மூலம் 39 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அயர்லாந்து அபார வெற்றி பெற்றது. இதனால் ரி-20 தொடரில் 1-0 என அயர்லாந்து முன்னிலை வகிக்கிறது.

அயர்லாந்து சார்பில் மேத்யூ ஹப்ரைஸ் 4 விக்கெட்டும், பேரி மெக்கர்தி 3 விக்கெட்டும், மார்க் அடைர் 2 விக்கெட்டும் வீழ்த்தினர். (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வெட்டித்துறை நகரசபை தவிசாளராக சிவாஜிலிங்கம்



(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை நகர சபையின் புதிய தவிசாளராக அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் (தமிழ் தேசிய பேரவை) முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவானார்.

தவமலர் சுரேந்திரநாதன், தனது தவிசாளர் பதவியை ராஜினாமா செய்த நிலையில் எம்.கே.சிவாஜிலிங்கம் 27 வருடங்களுக்கு பிறகு மீண்டும் வல்வெட்டித்துறை நகர சபையின் தவிசாளராக தெரிவானார்.

16 உறுப்பினர் களைக் கொண்ட வல்வெட்டித்துறை நகர சபைக்கு நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 7 ஆசனங்களையும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி 5 ஆசனங்களையும் தேசிய மக்கள் சக்தி 3 ஆசனங்களையும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியது.

எம்.கே.சிவாஜிலிங்கத்தை முதன்மை வேட்பாளராக நிறுத்தி அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் வல்வெட்டித்துறை நகர சபையில் போட்டியிட்டிருந்த போதும், எம்.கே. சிவாஜிலிங்கம் நியமன பட்டியல் ஊடாக களமிறங்கியிருந்ததால் உடனடியாக உறுப்பினராக தெரிவு செய்யப்படவில்லை.

ஏற்கனவே தெரிவான சபை உறுப்பினரொருவர் தனது பதவியை ராஜினாமா செய்த நிலையில் குறித்த வெற்றிடத்திற்கு எம்.கே.சிவாஜிலிங்கம் கட்சியால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டார்.

எம்.கே.சிவாஜிலிங்கம் உறுப்பினராக தெரிவானதும் தற்காலிக காலத்திற்கு செயற்பட்ட தவிசாளர் தவமலர் சுரேந்திரநாதன் தனது தவிசாளர் பதவியை ராஜினாமா செய்தார்.

புதிய தவிசாளரை தெரிவு செய்வதற்கான கூட்டம் நேற்று வல்வெட்டித்துறை நகர சபை சபா மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சா.சுதர்சன் தலைமையில் நடைபெற்றது.

தவிசாளர் பதவிக்காக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட எம்.கே.சிவாஜிலிங்கத்துக்கு 7 பேரும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட மகாலிங்கம் மயூரனுக்கு 6 பேரும் ஆதரவு வழங்கினர். தேசிய மக்கள் சக்தியின் மூன்று பேரும் வாக்களிப்பில் நடுநிலை வகித்தனர் (நி)

# லண்டனில் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்ட மாவீரர் தினம்

(லண்டன்)

இலங்கை உள்நாட்டுப் போரில் உயிர் நீத்த விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராளிகளை நினைவுகூரும் மாவீரர் நாள் நிகழ்வுகள் ஆண்டு தோறும் நவம்பர் 27 அன்று பிரித்தானியாவில் மிகவும் உணர்வுப்பூர்வமாக அனுசரிக்கப்படுகின்றன.



லண்டன், எக்ஸெல் ஒக்ஸ்போட் உள்ளிட்ட பல நகரங்களில் நடைபெற்ற இந்த நிகழ்வுகளில், பிரித்தானியாவில் வசிக்கும் பெருமளவிலான புலம்பெயர் தமிழர்கள் மற்றும் இளைஞர்கள் கலந்துகொண்டனர்.

உயிர் நீத்த போராளிகளின் உருவப்படங்கள் மற்றும் பெயர் தாங்கிய கல்லறைகளின் மாதிரிகள் வைக்கப்பட்ட நினைவுக் கூடங்களில், தமிழீழத் தேசியக் கொடியேற்றப்பட்டு, அஞ்சலிச் சுடர்கள் ஏந்தப்பட்டன. இந்நிகழ்வுகள் பல்வேறு தமிழ் அமைப்புகளால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

தமிழ்ச் சமூகத்தினர், இந்த நினைவேந்தல் மூலம் தமது கலாசார மற்றும் தேசிய அடையாளத்தை நிலைநிறுத்துவதாகவும், நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான தமது போராட்டத்தை உலகுக்கு எடுத்துரைப்பதாகவும் தெரிவித்தனர்.

இந்நாளை துக்கம், துணிவு மற்றும் உறுதிப்பாட்டுடன் நினைவுகூருவது ஒரு அடிப்படை உரிமை மட்டுமல்ல, அது நிறைவேற்றப்பட வேண்டிய கடமையாகும் என ஸ்ட்ராட்போர்ட் மற்றும் பவ் பாராளுமன்ற உறுப்பினர் உமா குமரன் வலியுறுத்தியுள்ளார். (நி)



# சேவைநலன் பாராட்டு

## பணிநிறைவு வாழ்த்து

சைவமும் தமிழும் மேன்மையுற்று விளங்கும் யாழ்ப்பாணத்தில் யா/ இந்து மகளிர் கல்லூரியிலும் யா/கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் பல ஆண்டுகள் ஆசிரியப் பணியைச் சிறப்புற ஆற்றி பணி நிறைவு பெறும் திருமதி கமலினி சிவயோகன் அம்மையார் அவர்களின் சேவை நலன் பாராட்டி வாழ்த்துகிறேன்.

ஆசிரியப் பணி மகத்தான பணியாகும். இவர் மாணவர்களின் ஒழுக்கம், ஆன்மீகம், அறம் என்று பல தளங்களில் மாணவர்களை மேன்மையடையச் செய்தவர்.

அவர் தமது ஓய்வுக் காலத்தில் இறை பணிகளுடன் சமூகப் பணிகளாற்றி குடும்பத்தாருடன் சீரும் சிறப்புடன் வாழ ஐம்பூதநாதப் பெருமானும், கொக்குவில் இந்துக் கல்லூரி அண்ணாமலையாரும் அருள்புரிய ஓய்வுக் காலம் இனிதே அமைய வாழ்த்துகின்றேன்.

தென்னவன் பார்த்தீபன்.
முதல்வர்-தென்நாடு சிவமடம்



## அதிபரின் வாழ்த்துச் செய்தி



எமது கல்லூரியில் கடந்த 13 வருடங்களாக உயிரியல் பாட ஆசிரியராக அர்ப்பணிப்போடு சேவையாற்றிய திருமதி கமலினி சிவயோகன் அன்போடும் அக்கறையோடும் தாய்மை உணர்வுடன் மாணவர்களை அரவணைத்து அறிவொளி ஊட்டியதோடு சரியான திசையில் அவர்களை ஆற்றுப்படுத்தியதனூடாக அவர்களது வாழ்வியலைச் செம்மைப்படுத்தும் தனித்துவம் மிக்க அசிரியராகச் செயற்பட்டவர். இவரிடத்தில் கற்றவர்கள் கல்லூரிக்கு அள்ளித் தந்த பெறுபேறுகளும் இதுவரை நிலைப்படுத்தி நிற்கும் சாதனைகளும் இவரின் கற்பித்தல் திறனை வெளிப்படுத்தி நிற்கும் உரைகல் எனில் அது மிகை யல்ல. இவருடன் உரையாடும் போது குறித்த பாடத் துறை மீதான இவரது நுண்மாண் நுழை புலம் கண்டு நான் வியந்ததுண்டு. "விதைத்தவன் உறங்கினாலும் விதைகள் உறங்குவதில்லை" என்பது போல் இவர் ஆசிரிய சேவையால் ஏற்றி வைத்த அறிவின் ஒளி என்றென்றும் சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டே இருக்கும். எம்முடன் பயணித்த இவரது தன்னலமற்ற ஆசிரியப்பணி அனைவருக்கும் சிறந்ததோர் முன்னுதாரணம் ஆகும்.

இவர் தனது ஓய்வுக்காலத்தை பயனுள்ள வகையில் அமைத்துக் கொள்வதோடு, உடல் உள ஆரோக்கியத்துடன் குடும்பத்தவருடன் மகிழ்ச்சியாக வாழ எல்லாம் வல்ல இறையரு ளின் துணையை நாடி, இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவி த்துக் கொள்கின்றேன்.

திரு. பெ.வசந்தன்,
அதிபர்.

திருமதி
கமலினி சிவயோகன்

சேவை விபரம்

யா/உடுவில் மகளிர் கல்லூரி
(16.01.1989-14.07.1998)
யா/ இந்து மகளிர் கல்லூரி
(15.07.1998-15.10.2012)
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
(16.10.2012-28.11.2025)

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

## வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



மகத்துவம் வாய்ந்த
மாண்பு மிகு சேவைதனை
மனதார ஏற்று ....

உயிரோட்டம் உடைய உன்னத
சேவையில் தனது தனித்துவத்தைத் தடம்பதித்து
சேவையின் தேவையால் பல
மாணவ மனங்களைக்
கொள்ளை கொண்ட
எம் கல்வி வலயத்தின் சிறந்த
உயிரியல் ஆசிரியை திருமதி.கமலினி சிவயோகன் அவர்களின் பணிநிறைவினை மனதாரப் பாராட்டி நன்றி கூறி வாழ்த்துகின்றேன்.

திருமதி. மாலதி முகுந்தன்,
வலயக்கல்விப் பணிப்பாளர்.
யாழ். கல்வி வலயம்.

## வாழ்த்துச் செய்தி

"பணிவுடையான் இன்சொலனாதல் ஒருவர்க்கு
அணியல்ல மற்றுப் பிற"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கு அமைய பணிவையும் இன்சொல்லையும தனது அணியாகக் கொண்டு எமது கல்லூரியில் பதின்மூன்று ஆண்டுகள் ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வுபெறும் திருமதி கமலினி சிவயோகன் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

உயர்தரப் பிரிவு உயிரியல் பாட ஆசிரியராகவும் மாணவர்களின் இணைபாடவிதான செயற்பாடுகளிலும் நிர்வாக நடவடிக்கைகளிலும் பங்காற்றி ஓய்வுபெறும் இந்நாளில் மகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

திருமதி.சகிலா மயூரன்,
தலைவர், ஆசிரியர் நலன்புரிக்கழகம்.

## வாழ்த்துச் செய்தி

கனிவான பேச்சோடு என்றும் கூடிவரும் அவரின் கடமையுணர்வு... உணர்வோடு உழைத்தவர் எம் முதல்வர் சபை முதன்மை பெற... கனிவோடு காத்தவர் எம் கல்லூரிப் பெண்களின் ஒழுக்கத்தை நன்றியுடன் துதிக்கின்றோம். நல் வரம் உடம் வாழ்வு.

திரு.தே.பிரபாகரன்,
பொறுப்பாசிரியர், மாணவர் முதல்வர் சபை .

(C-4443)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளினிக்குகளுக்கு வருவதை தற்காலிகமாக தவிருங்கள்!

## யாழ்.போதனாவின் பணிப்பாளர் சத்தியமூர்த்தி அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

தற்போது நிலவும் கடுமையான மழை மற்றும் சீரற்ற காலநிலை காரணமாக சேவைகளை மட்டுப்படுத்தி வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, மருத்துவ கிளினிக் மற்றும் பிற கிளினிக்குகளுக்கு வருவதை தற்காலிகமாகத் தவிர்க்குமாறு யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி அறிவித்துள்ளார்.

காலநிலை சீரான பின் வழக்கமான சிகிச்சைகளைப் பெற முடியும். குறிப்பாக இன்றுயாழ் மாவட்டம் கடுமையாக பாதிக்கப்படலாம் என எதிர்வு கூறப்படுகின்றது.

கிளினிக் மருந்துகள் கைவசம் இல்லாதவர்கள் கட்டாயம் மருந்துகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அல்லது, இயலாமை இருப்பின், கிளினிக் கொப்பிகளை அனுப்பி மருந்துகளைப் பெறவும் முடியும்.

மேலதிக தகவல்கள் தேவையெனில், 071 122 2261 எனும் தொலைபேசி ஊடாக தொடர்பு கொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்தார். (நி-33)

# அனர்த்த மீட்புப் பணிகள்

## இலங்கையுடன் கைகோர்த்த இந்தியா

(கொழும்பு)

"டிட்வா" சூறாவளி புயல் காரணமாக நாடு முழுவதும் கடுமையான வானிலை ஏற்பட்டுள்ளதால் இலங்கையின் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்கு உதவ கொழும்பில் தற்போது நிறுத்தப்பட்டுள்ள அதன் விமானம் தாங்கி கப்பலான ஐஎன்எஸ் விக்ராந்தில் இருந்து ஹெலிகொப்டர்களை அனுப்ப இந்தியா ஒப்புக்கொண்டுள்ளது.

முன்னதாக "டிட்வா" சூறாவளி புயல் காரணமாக ஏற்படும் கடுமையான வானிலைக்கு மத்தியில் கொழும்பில் தற்போது நிறுத்தப்பட்டுள்ள இந்திய போர்க்கப்பலிடமிருந்து உதவி கோரப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஏ.ா.வைஸ் மார்ஷல் சம்பத் துயகோந்தா தெரிவித்திருந்தார். (நி)

# பேருந்து நடத்துநர்களை

## அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்து

(கொழும்பு)

அதிதீவிரமான வானிலை காரணமாக, பொது பயணிகளுக்குச் சேவைகளை வழங்கும் பேருந்து நடத்துநர்கள் மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அதற்கமைய, பேருந்து நடத்துநர்கள் பின்பற்ற வேண்டிய முக்கிய விடயங்கள் குறித்து தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

பாதகமான வானிலை காரணமாகப் பேருந்துகள் இயக்கப்படும் போது, காவல்துறை வீதி தடைகள் இருக்குமாயின், குறித்த இடத்தில் பணியில் உள்ள பொலிஸ் அதிகாரிகளின் அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தில் மூழ்கியுள்ள வீதிகளில் எந்தக் காரணத்துக்காகவும் பேருந்துகளைச் செலுத்த வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பாதகமான வானிலை காரணமாக, மாற்று வழிகளைப் பயன்படுத்தும்போது, பேருந்தில் பயணிக்கும் பயணிகளுக்கு அது குறித்துத் தெரிவிக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், வளைந்த சாலைகள், செங்குத்தான சாலைகள் மற்றும் குறுகிய சாலைகளில் வாகனம் ஓட்ட வேண்டியிருக்கும் என்பதால், மாற்று வழிகளைப் பயன்படுத்தும் போது ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் கவனமாக இருக்குமாறு குறிப்பாக அறிவுறுத்தப்படுகிறார்கள். இந்த பாதகமான வானிலை சூழ்நிலையில், பொதுப் பயணிகள் தேவைப்படும் போது தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 1955 என்ற அவசர எண்ணில் தொடர்பு கொள்ள முடியும் என்றும் போக்குவரத்து ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (நி)

# தென்னைமர உச்சியில் சிக்கி தவித்த நபர்

## விமானப் படையினரால் மீட்பு



(அனுராதபுரம்)

அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் பின்னர் சிக்கித் தவித்த நபர்கள் இலங்கை விமானப் படையினரால் மீட்கப்பட்டுள்ளனர்.

அனுராதபுரத்தில் கலாவெவ பெருக்கெடுத்ததால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் நேற்று முன்தினம் முதல் தென்னை மரத்தில் சிக்கிய ஒருவர் விமானப்படையால் மீட்கப்பட்டுள்ளார். (நி)

# வலி.வடக்கு தவிசாளரின் வாகனம் மீது விழுந்த மரம்

(அராலி)

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சுகிர்தனின் வாகனம் மீது மரம் ஒன்று முறிந்து விழுந்ததால் வாகனம் பகுதி அளவில் சேதமடைந்துள்ளது. நேற்றைய தினம் சேந்தாங்குளம் பகுதியில் ஏற்பட்ட அனர்த்தத்தை பார்வையிடுவதற்காக தவிசாளர் அங்கு சென்ற வேளை இந்த அனர்த்தம் இடம் பெற்றது. (நி-104)

# இராசிபலன்

29.11.2025
கார்த்திகை 13 , சனிக்கிழமை
நவமி முன்னிரவு 6.06 மணிவரை

பூரட்டாதி முன்னிரவு 10.06 மணிவரை
சுப நேரம் 3.13-4.43 மணிவரை
இராகுகாலம் 9.13-10.43 மணிவரை

சந்திராஷ்டமம்:- ஆயிலியம், மகம்

வளவன்

**மேஷம்:** பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வழக்கத்தைவிட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை உருவாகும்.

**கடகம்:** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள்.

**துலாம்:** தலைமைப்பதவிகள் உங்களைத் தேடி வரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**மகரம்:** தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், சேமிப்பில் அக்கறை கூடும். பிரபலமான வர்களின் சந்திப்பால் பெருமையுண்டு.

**ரிஷபம்:** முன்னேற்றத்திற்கு உதவியவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், வாகன சுகமுண்டு.

**சிம்மம்:** வாகனப் பழுதுச் செலவுகள் ஏற்படலாம், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், வழிபாட்டால் வளர்ச்சி கூடும், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**விருச்சிகம்:** புண்ணிய காரியங்களில் அதிகம் ஆர்வம் காட்டுவீர்கள், தூரத்து உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மகிழ்ச்சி கூடும் நாள், பிறர் உதவியுண்டு.

**கும்பம்:** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**மிதுனம்:** பேச்சைக்குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், செய்தொழில் முன்னேற்றம் காணும் நாள்.

**கன்னி:** குதூகலம் தரும் பயணமொன்று ஏற்படலாம், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள் போசன சுகமுண்டு.


**தனுசு:** ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடி கொள்ளும்.

**மீனம்:** திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், குடும்பத்தினரிடையே முன்கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, போசன சுகமுண்டு.

நீ விழும் வரை விட்டு வைக்கிற நண்பன் உன் விரோதி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமைதித்திட்டம் குறித்து பேசத் தயார் மௌனம் கலைத்தார் ரஷ்ய ஜனாதிபதி



(மொஸ்கோ)

உக்ரைனில் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அமைதித் திட்டம் குறித்து ரஷ்ய ஜனாதிபதி புடின் மௌனம் கலைத்துள்ளார்.

உக்ரைனின் ஐந்தில் ஒரு பங்கு நிலப்பரப்பை ரஷ்யா கட்டுப்பாட்டில் வைத்துள்ளது.

ரஷ்யப் படைகள் தற்போது கிழக்கு உக்ரைனில் அந்நாட்டு படைகளுடன் சண்டையிட்டு வருகின்றன.

போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அமைதித்திட்டத்தை முன்மொழிந்து உள்ளார்.

இதற்கு உக்ரைன் வரவேற்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக நிருபர்களிடம் புடின் கூறியதாவது:

அமெரிக்காவின் அமைதி திட்டம் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான எதிர்கால ஒப்பந்தமாக மாறக் கூடும்.




இது தொடர்பாக தீவிர பேச்சுவார்த்தை நடத்த ரஷ்யா தயாராக உள்ளது.

உக்ரைன் படைகள் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை விட்டு வெளியேறினால், நாங்கள் போர் நடவடிக்கைகளை நிறுத்துவோம்.

அவர்கள் அவ்வாறு செய்யாவிட்டால், நாங்கள் அதை இராணுவ நடவடிக்கை மூலம் அடைவோம். உக்ரைனின் சட்டவிரோத தலைமையுடன் எந்த ஆவணங்களிலும் கையெழுத்திடுவது அர்த்தமற்றது.

உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கியின் தேர்ந்தெடுக்கப்பட்ட பதவிக்காலம் முடிவடைந்த போது தேர்தலை நடத்த மறுத்ததால் உக்ரைன் தலைமை தனது சட்டப்பூர்வத் தன்மையை இழந்தது என புடின் தெரிவித்தார். (நி)

# இந்திய பகுதிகளை இணைத்து ரூபாய் வெளியிட்ட நேபாளம்




(காத்மாண்டு)

இந்தியாவின் எல்லைப் பகுதிகளான உத்தரகாண்டில் உள்ள கலாபானி, லிபுலேக் உள்ளிட்ட பகுதிகளை இணைத்து நேபாளம் வெளியிட்ட 100 ரூபாய் நோட்டு சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

இந்தியா - நேபாளம் எல்லையில் லிபுலேக், லிம்பியாதுரா, கலாபானி ஆகிய பகுதிகள் உள்ளன. இவை உத்தரகாண்ட் மாநிலத்தில் அமைந்துள்ளன.

இந்த பகுதியை நேபாளம் உரிமை கொண்டாடி வருகிறது.

இதனை இந்தியா நிராகரித்து விட்டது. இருப்பினும், இந்த பகுதிகளை உள்ளடக்கி, வரைபடம், ரூபாய் நோட்டுகளை நேபாளம் வெளியிட்டு வருகிறது.


புதிதாக வெளியிட்டுள்ள 100 ரூபாய் நோட்டிலும் இந்த பகுதிகள் இடம்பெற்றுள்ளன.

அந்நாட்டு ரிசர்வ் வங்கி கவர்னர் கையெழுத்துடன் இந்த நோட்டுகள் வெளியாகியுள்ளன.

இதனால், இரு நாடுகளுக்கு இடையே உறவு மோசமாகும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. (நி)




# சீனாவில் ரயில் மோதி தொழிலாளர்கள் 11 பேர் உயிரிழப்பு



(பீஜிங்)

சீனாவில் சோதனை ஓட்டமாக இயக்கப்பட்ட ரயில் மோதியதில் தொழிலாளர்கள் 11 பேர் உயிரிழந்தனர். 2 பேர் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

உலகின் மிகப்பெரிய ரயில்வே கட்டமைப்புகளை கொண்ட நாடாக சீனா திகழ்கிறது. ஒவ்வொரு ஆண்டும் அங்கு ரயில் விபத்துகளில் ஏராளமானோர் உயிரிழந்து வருகின்றனர்.

இந்நிலையில், யுன்னான் மாகாணத்தில் உள்ள குன்மிங் என்ற இடத்தில் இன்று (நவம்பர் 27) ரயில் சோதனை ஓட்டம் நடந்தது.

தண்டவாளத்தில் ஊழியர்கள் நின்று கொண்டிருந்தனர். அப்போது சோதனை ரயில் அவர்கள் மீது மோதியது.

இந்த விபத்தில் 11 பேர் உயிரிழந்தனர். 2 பேர் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். தகவலறிந்ததும் மீட்புப்படையினர் சம்பவ இடத்துக்கு வந்து மீட்புப்பணியில் ஈடுபட்டனர்.

சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ள ஹொங்காங்கில் அடுக்குமாடி குடியிருப்பில் ஏற்பட்ட தீவிபத்தில் 55 பேர் உயிரிழந்த நிலையில், அடுத்ததாக ரயில் விபத்தில் 11 பேர் உயிரிழந்தது அந்நாட்டில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (நி)

# அமெரிக்காவில் ஜி-20 மாநாடு தென்னாபிரிக்காவுக்கு அழைப்பு இல்லை

(நியூயார்க்)

அடுத்தாண்டு அமெரிக்காவில் நடைபெற உள்ள, "ஜி - 20" உச்சி மாநாட்டில் பங்கேற்க தென்னாபிரிக்காவுக்கு அழைப்பு விடுக்கப்படாது என, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்து உள்ளார்.

ஜி - 20 நாடுகள் என்பது பொருளாதார ஒத்துழைப்புக்கான ஒரு சர்வதேச அமைப்பு.

இதில், இந்தியா, அமெரிக்கா, தென்னாபிரிக்கா உள்ளிட்ட நாடுகள் இடம்பெற்றுள்ளன.

நடப்பாண்டுக்கான ஜி - 20 நாடுகளின் தலைமை பொறுப்பை தென்னாபிரிக்கா வகிக்கிறது.

இதைத் தொடர்ந்து டிசம்பர், 1ஆம் திகதி முதல் அடுத்தாண்டு நவம்பர் 30ஆம் திகதி வரை, அடுத் தாண்டுக்கான ஜி - 20 தலைமை பொறுப்பை அமெரிக்கா ஏற்க உள்ளது.

மனித உரிமை மீறல் நடைபெறுவதாகவும், வெள்ளை இனமக்களுக்கு எதிராக பாகுபாடு காட்டுவதாகவும் கூறி, தென்னாபிரிக்காவில் சமீபத்தில் நடந்த உச்சி மாநாட்டை, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் புறக்கணித்தார்.

ஜி - 20 மாநாட்டின் முடிவில், தலைமை பொறுப்பை அமெரிக்க தூதரகத்தின் மூத்த பிரதிநிதியிடம் ஒப்படைக்க தென்னாபிரிக்கா மறுத்து விட்டது.

இந்நிலையில், அடுத்தாண்டு புளோரிடா மாகாணம் மியாமியில் நடைபெறும் ஜி - 20 உச்சிமாநாட்டில் பங்கேற்க, தென்னாபிரிக்காவுக்கு அழைப்பு விடுக்கப்படாது என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

மேலும், உலகின் எந்தவொரு அமைப்பிலும் உறுப்பினராக இருக்க தகுதியற்ற நாடு என்பதை தென்னாபிரிக்கா நிரூபித்துவிட்டதாக ட்ரம்ப் கடுமையாக விமர்சித்துள்ளார்.

இவை தவிர, தென்னாபிரிக்காவுக்கு வழங்கப்பட்டு வரும் நிதியுதவிகள் மற்றும் மானியங்களை உடனடியாக நிறுத்தப் போவதாகவும் கூறியுள்ளார். (நி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின்


பாகம் 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

921





என்னுடைய குமாரர்கள் அதற்குக் குறுக்கே நின்றால்"

"சுவாமி! அப்படி ஒரு நாளும் நேராது. தங்கள் விருப்பத்துக்கு மாறாகத் தங்கள் குமாரர்கள் ஒரு நாளும் தடை சொல்ல மாட்டார்கள். அருள்மொழிக்கு இராஜ்ய ஆசையே கிடையாது. இலங்கை மணிமகுடத்தை அவனுக்குக் கொடுத்தார்கள். அதை அவன் வேண்டாம் என்று மறுதளித்து விட்டான். அப்படிப்பட்டவனா தங்கள் வார்த்தைக்கு மறுவார்த்தை கூறப் போகிறான் கரிகாலன் மட்டும் என்ன? அவனுக்குத் தாங்களே யுவராஜ பட்டாபிஷேகம் செய்து வைத்தீர்கள் அதனால் ஒப்புக் கொண்டான். அவனுடைய வீர பராக்கிரமத்தைப் பற்றி நான் சொல்ல வேணுமா? அவன் ஆசைப்பட்டால் தானாகவே அவனுடைய வீரவாளின் உதவியைக் கொண்டு பெரிய இராஜ்யத்தை ஸ்தாபித்துக் கொள்ளக் கூடியவன் அல்லவா? ஆனால் அவனுக்கும் இராஜ்யம் ஆளுகிற ஆசை இல்லை. தாங்கள் அவனிடம் தங்கள் விருப்பம் இன்னதென்பது பற்றி ஒரே ஒரு வார்த்தை சொல்ல வேண்டியதுதான்"

"அந்த வார்த்தை நான் சொல்லிவிடப்போகிறேனே, அவன் காதில் விழுந்துவிடப் போகிறதே என்பதற்காகத்தானே, எத்தனை சொல்லி அனுப்பியும் இங்கே வராமல் ஆட்டம் போடுகிறான்?"

"சக்கரவர்த்தி! பட்டத்து இளவரசர் காஞ்சியில் அற்புதமான பொன் மாளிகை நிர்மாணித்துவிட்டுத் தங்களின் வருகைக்காகக் காத்திருக்கிறார்"

"எதற்காகக் காத்திருக்கிறான் என்று எனக்குத் தெரியும். கம்ஸன் அவனுடைய பெற்றோர்களைச் சிறை வைத்தது போல் எங்களைச் சிறை வைத்துவிட்டுச் சோழ சிம்மாசனம் ஏறக் காத்திருக்கிறான். அவன் கட்டியிருப்பது பொன் மாளிகையோ, அல்லது அரக்கு மாளிகை தானோ, யாருக்குத் தெரியும்?"

"சுவாமி! கரிகாலனைப் பற்றித் தாங்கள் இவ்வாறு சொல்வது கொடுமை!" என்றாள் மலையமான் மகள்.

"சக்கரவர்த்தியின் உள்ளத்தை அவ்வளவு தூரம் விஷமாக்கி வைத்திருக்கிறார்கள்!" என்றார் முதன்மந்திரி.

"வேறு யாரும் இல்லை. என் மனத்தில் விஷம் ஏற்றியவன் கரிகாலனேதான்! அவன் எனக்கு உண்மையான மகனாயிருந்தால் எத்தனை தடவை சொல்லி அனுப்பியும் ஏன் வரவில்லை?" என்று சுந்தரசோழர் கேட்டார்.

"அதற்கு வேறு சரியான காரணங்களும் இருக்கலாம் அல்லவா?"

"நீங்கள் ஒரு காரணத்தை ஊகித்துச் சொல்லுவது தானே?"

"கரிகாலன் கொள்ளிடத்துக்கு இப்பால் வந்தால் பழுவேட்டரையர்கள் அவனைச் சிறைப்படுத்தி விடுவார்கள் என்று நாடெல்லாம் பேச்சாயிருக்கிறது."

"அம்மாதிரி சொல்லி என் மகனுடைய மனத்தை யாரோ கெடுத்திருக்கிறார்கள்! இவளுடைய தகப்பன் திருக்கோவலூர் மலையமான் ஒருவன், கொடும்பாளூர் வேளான் ஒருவன். நீங்களும் அவர்களோடு சேர்ந்து கொண்டீர்களோ, என்னவோ தெரியவில்லை."

தொடரும்...



# சிறுவர் அரங்கம்

## செத்த எலியால் வியாபாரி ஆனான்



சிறிய நகரம் ஒன்றில் இளைஞன் ஒருவன் இருந்தான். அவன் பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த போது அவன் பெற்றோர் இறந்து விட்டனர். உறவினர் எவரும் இல்லை. குடியிருக்க சிறிய வீடு மட்டும் இருந்தது. வேலையும் கிடைக்கவில்லை. ஏதாவது வியாபாரம் செய்யலாம் என்றால், பணமும் இல்லை.

அவனிடம் அனுதாபம் கொண்ட ஒருவர், ஒரு யோசனை கூறினார்: "பக்கத்து ஊரில், ஒரு செட்டியார் இருக்கிறார். வியாபாரம் செய்யக் கடன் கொடுப்பார். பிறகு, வட்டியோடு அசலையும் சேர்த்துக் கொடுக்க வேண்டும். அவரிடம் சென்று கேட்டுப்பார்" என்று கூறினார்.

மறுநாள் மிகுந்த உற்சாகத்தோடு செட்டியாரைக் காணச் சென்றான் அந்த இளைஞன்.

அந்த நேரத்தில் செட்டியார், ஒருவனைக் கோபித்துக் கொண்டிருந்தார். அவன் செய்த வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டதால், அசலும் வட்டியும் கொடுக்கவில்லை என்று பேச்சில் தெரிய வந்தது.

மேலும் "முதலை இழக்கும் படியான வியாபாரத்தை எந்த முட்டாளாவது செய்வானா? திறமைசாலியாக இருந்தால், அங்கே கிடக்கும் செத்த எலியைக் கொண்டே பணம் சம்பாதித்து விடலாமே" என்று கடுமையாகப் பேசினார். அவனும் பிறகு வருவதாகக் கூறி போய்விட்டான்.

பிறகு செட்டியார், இளைஞனை ஒரு பார்வை பார்த்தார். "நீ எதற்காக வந்திருக்கிறாய்?" என்பது போலிருந்தது அவர் பார்வை. இளைஞன் புத்திசாலித்தனமாக, "எனக்குக் கடன் எதுவும் வேண்டாம். அங்கே மூலையில் கிடக்கின்ற செத்த எலியைக் கொடுத்தால் போதும்" என்றான். - "தாராளமாக எடுத்துச் செல்" என்றார் செட்டியார். இளைஞன், செத்த எலியை எடுத்துக் கொண்டு சென்றான். ஒரு கடலை வியாபாரி, தான் வளர்க்கும் பூனைக்கு இரை ஆகுமே என்று நினைத்து, செத்த எலியை வாங்கிக் கொண்டு சிறிதளவு கடலையைக் கொடுத்தான் இளைஞனுக்கு.

அதை வீட்டுக்குக் கொண்டு வந்து, வறுத்துப் பொட்டுக் கடலையாக்கினான். அதோடு, ஒரு குடத்தில், குடிதண்ணீர் எடுத்துக் கொண்டு போய் ஊருக்கு வெளியே மரத்தடியில் உட்கார்ந்தான்.

கடுமையான வெயிலில், விறகு வெட்டிக் கொண்டிருந்த விறகு வெட்டிகள் சிலர், களைப்புமிகுதியால், இளைப்பாற மரத்தடியில் அமர்ந்தனர். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கல்களை எதிர்கொள்ளும் போது கூடவே பல திறமைகளும் வெளிப்படுகின்றன.
~ அப்துல் கலாம்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# நாட்டை உலுக்கி வரும் இயற்கை அனர்த்தம்

தாழமுக்கம், கடும்மழை, சூறாவளி என எகிறிப் பாய்கின்ற இயற்கை அனர்த்தத்தால் நம்நாடு அவதரிக்கின்ற அவல நிலைக்கு ஆளாகியுள்ளது. ஆம், தற்போது இலங்கையை மையப்படுத்திய தாழமுக்கம் கொட்டித் தீர்க்கும் கனமழை கரை புரண்டு ஓடுவதால், எங்கும் வெள்ளப் பெருக்கும் பேரனர்த்தமும் ஏற்பட்டுள்ளன.

கூடவே சூறாவளிக் காற்றின் தாண்டவம் பாரிய மரங்களைச் சரித்துவிட, போக்குவரத்துகள் தடைப்பட்டு மின் கம்பிகள் அறுந்து விழுந்து எங்கும் இயற்கை அனர்த்தம் தாண்டவம் ஆடுகின்றது. இதற்கு அப்பால், குளங்கள் வான் பாய்கின்றன. உடைப்பெடுக்கின்றன. காற்றாற்று வெள்ளம் செய்பயிர்களை துவம்சம் செய்வதுடன் கால்நடைகளை பலி எடுத்தும் வீடுகள், பாலங்கள், வீதிகள், குளக்கட்டுக்களை தகர்த்தெறிந்தும் கோரதாண்டவம் ஆடுகின்றது.

இதனால் ஏற்பட்ட மனித உயிரிழப்புகள் இதயத்தை வதைக்கின்றன. ஆம், மலையகத்தின் துயரமாக இருக்கின்ற மண்சரிவு வழமை போல் தன் கணக்கிற்கு மனித உயிர்களைப் பலி எடுத்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தின் முன்னெச்சரிக்கைகள் மற்றும் வானியல் துறை சார்ந்தவர்களின் எதிர்வு கூறல்களின் படி, 131 ஆண்டுகளுக்குப் பின்னர் இலங்கையில் இப்படி ஒரு இயற்கைப் பேரனர்த்தம் ஏற்பட்டுள்ளது எனக் கணிக்கப்பட்டுள்ளது.

உண்மையில் வானியல் திணைக்களத்தின் எச்சரிக்கைகள், துறை சார்ந்த வல்லுனர்களின் அறிவுறுத்தல்கள் காரணமாக மனித உயிரிழப்புகள் கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளன எனலாம்.

எனினும் குறித்த வெள்ளப்பெருக்கினால் ஏற்படுகின்ற உடனடி இழப்புகளுக்கு அப்பால் விவசாயம், கால்நடை, கடற்தொழில் உள்ளிட்ட தொழிற்துறை சார்ந்தவர்கள் மிகப்பெரும் இழப்புகளைச் சந்தித்துள்ளனர்.

ஆக, இலங்கையைத் தாக்கியுள்ள மழையும் சூறாவளிக் காற்றும் நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

ஆகவே, இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக உதவுவது எங்கள் ஒவ்வொருவரதும் தலையாய கடமையாகும். இங்கு இயற்கைப் பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவது என்பது இரண்டு வழிகளில் இடம்பெற வேண்டும்.

அதில் ஒன்று, அரச அமைப்பின் ஊடான உதவி. மற்றையது பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புகள், தொண்டு நிறுவனங்களின் உதவி.

இங்கு அனர்த்த முகாமைத்துவப் பிரிவினூடாக இடம்பெறும் அரச உதவி என்பது, வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக வழங்க வேண்டிய உதவியை குறித்துரைப்பதாகும்.

அதேபோன்று பொதுமக்களின் உதவி என்பது இடர்படுகின்ற மக்களை ஆற்றுப்படுத்தி அவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவதாகும்.

இங்கு உயிரிழப்புகளைச் சந்தித்த குடும்பங்களுக்கான இழப்பீட்டுத் தொகை மற்றும் வீடிழந்தவர்களுக்கு வீடமைத்துக் கொடுத்தல் ஆகியனவும் அரசின் இயற்கை அனர்த்த புனர்வாழ்வாக இருக்க வேண்டும்.

# வெள்ளப் பேரிடரை எதிர்கொள்ள தயார் நிலையில் யாழ்.மாநகரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் மழை வெள்ளத்தால் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளைத் தடுக்கும் பொருட்டு மாநகர சபை நிர்வாகம் முழுமையான பேரிடர் தடுப்பு ஏற்பாடுகளுடன் தயார்நிலையில் உள்ளதாக மாநகர முதல்வர் திருமதி மதிவதனி விவேகானந்தராசா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

வெள்ளப் பாதிப்புக்களை கட்டுப்படுத்துவதற்கான அவசர நடவடிக்கைகள் மற்றும் மாநகர சபையின் அடிப்படை தேவைகளுக்கான முறைப்பாடுகளை வழங்குவதற்காகப் பொதுமக்கள் மாநகரசபையின் 021 222 2275 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு எந்நேரமும் அழைக்க முடியும்.

மழை வெள்ளப் பாதிப்புக்களை குடியிருப்புப் பகுதிகளில் குறைக்கும் முகமாக மழை வெள்ள நீரை வழிந்தோடச் செய்வதற்கான தற்காலிக நடவடிக்கைகள் மற்றும் அதீத பாதிப்புக்கள் காரணமாக பிரதேச செயலகங்களால் ஏற்படுத்தப்படும் இடைத்தங்கல் முகாம்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தல் உள்ளிட்ட முக்கிய சேவைகளை வழங்குவதற்கு ஏதுவாக மாநகரசபையின் பொதுச் சுகாதார பொறியியற் பிரிவு, சுகாதாரப் பிரிவு, மின்சாரப் பகுதி மற்றும் தீயணைப்புப் பிரிவு உள்ளிட்ட முக்கிய மாநகர திணைக்களங்களும், அதன் உத்தியோகத்தர்களும் தயார் நிலையில் உள்ளனர்.

மேலும் மாநகர எல்லைப் பிரதேசங்களில் மழை வெள்ளநீர் வழிந்தோடுவதற்கான தற்காலிக நடவடிக்கைகளை மாநகர ஊழியர்கள், உத்தியோகத்தர்களைக் கொண்டு பிரதி முதல்வர், கிராமத்துக் குழுத் தலைவர், சுகாதாரக்குழு தலைவர் மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள் குழு களத்தில் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது என்றார். (ம-7)

## கிளிநொச்சியில் பேரிடர்

# தொடர் கனமழையால் வான்பாயும் குளங்கள்

(கிளிநொச்சி)

தொடர்ச்சியாகப் பெய்து வரும் கனமழை காரணமாக கிளிநொச்சியிலுள்ள பெரும்பாலான குளங்கள் நிரம்பி வான் பாய்வதால், தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இதன் காரணமாக, மக்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர்.

நேற்று மாலை வரை கிடைக்கப்பெற்ற தகவலின் படி,

கிளிநொச்சி மாவட்டத்தின் கிழக்குப் பகுதிகளிலுள்ள அனைத்துக் குளங்களும் வான் பாய்கின்றன.

இரணைமடுக்குளத்தின் வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன.

அத்தோடு கிளிநொச்சி மேற்குப் பகுதியில் குடமுருட்டி குளம் மாத்திரம் வான் பாய்கின்றது.

இதன் காரணமாக தாழ் நிலப்பகுதிகள் பல வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்தமையால் மக்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளில் தங்கியுள்ளனர். (ம-7)

# வெள்ளத்தின் கோரப்பிடியில் சிக்கியது திருகோணமலை

## 11,350 பேர் பாதிப்பு

(திருகோணமலை)

கடந்த ஐந்து நாட்களுக்கு மேலாக திருகோணமலை மாவட்டத்தில் பெய்து வரும் கனமழை மற்றும் கடும் காற்று காரணமாக மாவட்டத்தின் 11 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் மொத்தம் 3 ஆயிரத்து 844 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 350 பேர் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் W. H. G. M. ஹேமந்தகுமார தெரிவித்துள்ளார்.

கந்தளாய் வான் கதவு திறக்கப்பட வாய்ப்புள்ளதால் கிண்ணியா, கந்தளாய், தம்பலகாமம் ஆகிய பிரதேச மக்கள் அவதானமாக இருக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கடற்கரை ஓரமாக வசிப்பவர்கள் இரவு நேரங்களில் உறவினர் வீடுகளில் தங்கச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

வீதிகள், பாலங்கள், கால்வாய்கள் போன்ற பொது உட்கட்டமைப்புகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக முப்படையினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

நிவாரணப் பணிகளும் துரிதப்படுத்தப்பட்டு வருகின்றன என அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார். (ம-7)

# வீட்டின் மீது சரிந்து விழுந்தது மண்மேடு

## மூவர் உயிரிழப்பு

நாவலப்பிட்டி பழைய தொடருந்து முனைய வீதியிலுள்ள வீடொன்றின் மீது நேற்று (28) மண்மேடு சரிந்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர்.

நாவலப்பிட்டி பிரதேசத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் கனமழையினால் குறித்த வீட்டின் மீது மண்மேடு சரிந்து விழுந்துள்ளது. பிரதேச வாசிகளும் நாவலப்பிட்டி பொலிஸாரும் விபத்துக்குள்ளானவர்களைக் காப்பாற்ற பெரும் பிரயத்தனம் மேற்கொண்ட போதும் அது பயனளிக்காத நிலையில் மூன்று மாதக் குழந்தை உட்பட இரண்டு பெண்கள் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

நாவலப்பிட்டி பிரதேசத்தில் இதுவரை 5 பேர் உயிரிழந்ததுடன் சுமார் 50 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-7)


JSAC
பெண்களுக்கு பாதுகாப்பான இணையம் உருவாகும்போதுதான் சமத்துவம் என்றும் நிறைவு பெறும்.
16 2025

# வடமாகாண மரநடுகை மாதம்
# கார்த்திகை 01 - 30, 2025

"அறச்செயல்களின் மொத்த வடிவம் மரமே. கைமாறு கருதாது. நமக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் வாரி வழங்குபவை மரங்கள் தான். தன்னை வெட்டுபவனுக்கும் கூட நிழலாய் இருந்து அவனைக் காப்பதும் மரங்களே"
கௌதம புத்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாராளுமன்றத்தில் பெண்களின் அரசியல் 12

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம், தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

ஹங்குராங்கெத்த, மாஓய - கொஸ்கலந்த, உனுவின்ன பகுதியில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கியிருந்த 37 பேரை இலங்கை கடற்படையின் மீட்புக் குழுக்கள் வியாழக்கிழமை (27) பாதுகாப்பாக மீட்டுள்ளனர். மாஓய உனுவின்ன கிராமத்திற்குச் செல்லும் வீதியில் மண் மேடு சரிந்து விழுந் ததால் 17 குடும்பங்கள் மண் சரிவில் சிக்கியின.

சம்பவ இடத்திற்கு விரைந்த கடற்படை மீட்புக் குழுக்கள், உள்ளூர் மக்களின் உதவியுடன், 18 குழந்தைகள் உட்பட அனைவரையும் மீட்டு பாதுகாப்பான இடங்களுக்கு •பத்திரமாக அழைத்துச் சென்றனர். அதைத் தொடர்ந்து, பாரம்பரிய மருத்துவப் பயிற்சியாளர்களுக்கு சுகாதார அமைப்பில் பதிவு செய்து முறையான அங்கீகாரம் அளித்தார்.

சுகாதார அமைப்பில் நிதி இல்லாததைக் கண்டறிந்ததும், விஜேவர்தன நிதி சேகரிக்கும் நோக்கத்திற்காக ஒரு லொத்தர் (ஆரோக்யா) முறையைத் தொடங்கினார். இந்த நிறுவனம் எதிர்பார்த்ததை விட வெற்றியடைந்ததால், ஆரோக்யா இப்போது இலங்கையின் தேசிய லொத்தர் சபையாக மாறியுள்ளது.

ஜூன் 1958 இல், அவர் உள்ளாட்சி மற்றும் வீட்டு வசதி அமைச்சராக நியமிக்கப்பட்டார். அவரது முதல் கடமைகளில் ஒன்று பாரம்பரிய மருத்துவ பயிற்சியாளர்கள் கஞ்சாவை வளர்க்க அனுமதிக்கும் சட்டத்தை அறிமுகப்படுத்தியது, இது அவர்களின் மருத்துவ தயாரிப்புகளுக்கு அத்தியாவசியமானது, அந்நிய செலாவணியை சேமிக்கிறது. 1959 இல் தஹநாயக்க அமைச்சரவையில் உள்ளூராட்சி மற்றும் வீடமைப்பு அமைச்சராக அவர் பதவி வகித்தார்.

1959 ஆம் ஆண்டு நவம்பர் 21 ஆம் திகதி, இலங்கைப் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் படுகொலை தொடர்பாக அவர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டு மூன்று மாதங்களுக்குப் பிறகு காவலில் வைக்கப்பட்டார், இதனால் அவர் உள்ளூராட்சி அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். முதற்கட்ட விசாரணையில் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது அதன்பின் அவர் நிரபராதி எனக் கண்டறியப்பட்டு அனைத்து குற்றச்சாட்டுகளும் தள்ளுபடி செய்யப்பட்டன. குற்றச்சாட்டுகளினால் ஏற்பட்ட களங்கம் அவரது அரசியல் வாழ்க்கையை முடிவுக்கு கொண்டு வந்தது.

ஜூலை 1960 இல் அவர் வெளியேற்றப்பட்ட பிறகு, அவர் கிறிஸ்தவத்திற்கு மாறினார் மற்றும் கிறிஸ்தவ மறுமலர்ச்சிக் கூட்டங்களில் வழக்கமான பங்கேற்பாளராக மத சார்புடைய வாழ்க்கையை கழித்தார்.

### விவியன் குணவர்தன- (MP 1956-60, 1964-65, 1970-1977)

வயலட் விவியன் குணவர்தன, பொதுவாக "விவி" என்று அழைக்கப்படும் இவர், ஓர் இலங்கை காலனித்துவ எதிர்ப்பு ஆர்வலர் மற்றும் அரசியல்வாதி ஆவார். இவருக்கு பிரசவம் பார்க்க உதவிய பிரெஞ்சு செவிலியரின் பெயரால் இவருக்கு விவியன் என்று பெயரிடப்பட்டது. உலகின் முதல் பெண் அமைச்சர்களில் ஒருவராக பணியாற்றினார். இந்திய சுதந்திர இயக்கம் மற்றும் இலங்கை சுதந்திர இயக்கம் ஆகிய இரண்டிலும் முக்கிய உறுப்பினராக இருந்தார், இவர் இடதுசாரிகளின் மிகவும் துடிப்பான ஆளுமைகளில் ஒருவராகவும், இலங்கை இடதுசாரி இயக்கத்தின் முன்னணி பெண் நபராகவும் இருந்தார். ஆரம்பத்தில் கொழும்பு மாநகர சபை உறுப்பினராக இருந்தவர்.

இவர் ஏகாதிபத்திய எதிர்ப்பு சூரிய மலர் இயக்கத்தில் ஈடுபட்டு அநீதிகளுக்கு எதிராகப் போராடினார். 1934 மலேரியா தொற்றுநோயின் போது இவர் தன்னார்வத் தொண்டு செய்தார். இவர் பல்கலைக்கழகத்திலும் சமூக செயற்பாட்டில் ஈடுபட்டார். இவரது கணவர் லெஸ்லி குணவர்த்தன ஆவார்.

இவரது அரசியல் வாழ்க்கையின் போது, இவர் லங்கா சமசமாஜக் கட்சியின் எழுச்சிக்கு உறுதுணையாக இருந்தார். இரண்டாம் உலகப் போரின் தொடக்கத்தில், வேறொரு பெயரில் இந்தியாவிற்குச் சென்றார். இதன் மூலம் இவர் கைது செய்யப்படுவதனை தவிர்த்தார். அங்கு, வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் கலந்து கொண்டார், 1947 இல் பிரிட்டனிடமிருந்து இந்தியா சுதந்திரம் அடைந்தது. இவர் இலங்கைக்குத் திரும்பியவுடன், 1948 இல் பிரித்தானியாவிடம் இருந்து இலங்கை சுதந்திரம் பெறுவதில் பெரும் பங்கு வகித்தார். 1940கள் முதல் 1960கள் வரை, லங்கா சமசமாஜக் கட்சி இலங்கையின் முக்கிய ஒரு எதிர்க் கட்சியாக இருந்தது,

இவர் கொழும்பு வடக்கு தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் 1956-1960 வரை, பொரளை தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் 1964-1965 வரை, உள்நாட்டு விவகார அமைச்சின் செயலாளர் பதவியில் 1964-1965 வரை, தெகிவளை-கல்கிசை தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் 1970–1977 வரை, இவர் சுகாதார பிரதி அமைச்சர் பதவியில் (Junior Minister of Health) 1970-1977 வரை இருந்தார்.

1960 ஆம் ஆண்டு மார்ச் மாத தேர்தலில் கொழும்பு வடக்கில் போட்டியிட்டு 844 வாக்குகளாலும் 1960 ஆம் ஆண்டு ஜூலை மாத தேர்தலில் 144 வாக்குகளாலும் தோல்வியுற்றார் விவியன்.

1956 மொழிப்பிரச்சினையின் போது தமிழ்-சிங்கள சம மொழி அந்தஸ்துக்காக போராடிய விவியனை சிங்கள இனவாத தரப்பினர் "யாழ் தேவி" எனப் பட்டப் பெயர் சூட்டி அழைத்தனர்.

### சூரிய மலர் இயக்கம் பற்றி....

நவம்பர் 11 நினைவுறுத்தும் நாளில் பிரித்தானிய முன்னாள் போர் வீரர்களின் நலனுக்காக பொப்பி விற்பனை செய்யப்பட்டு வந்தது. பெண்கள் பொப்பி மலர்களை விற்பனை செய்து அதன் மூலம் வரும் பணத்தை முன் னாள் போர் வீரர்களுக்கு வழங்கி வந்தார்கள். இலங்கையில் இருந்து பங்குபற்றிய போர் வீரர்களுக்கு சிறிய அளவு கொடுப்பனவுகளே வழங்கப்பட்டதாக தேசியவாதிகள் குறை கூறினர். 1931 ஆம் ஆண்டில் இலங்கையின் முன்னாள் போர் வீரர் ஏலியன் பெரேரா என் பவர் தனது முன்னாள் சகாக்களின் நலனுக்காக இந்நாளில் பூவரசு மலர்களை (சிங்களத்தில் சூரிய மல) விற்பனை செய்ய ஆரம்பித்தார்.

அடுத்த ஆண்டில் கொழும்பு தெற்கு இளைஞர் அணி இவ்வியக்கத்தில் இணைந்து கொண்டது. 1933 நவம்பரில் இவர்கள் சூரிய மலர் இயக்கத்தை அமைதியும் விடுதலையும் என்ற தொனிப் பொருளுடன் ஆரம்பித்தனர். இலங்கையின் வீதிகளில் இளைஞர்களும் பெண்களும் சூரிய மலர்களை விற்பனை செய்தனர். டொரீன் யங் (எஸ். ஏ. விக்கிரமசிங்காவின் மனைவி), செலினா பெரேரா போன்ற பெண்கள் இவ்வியக்கத்தில் முக்கிய பங்காற்றினர். டொரீன் தலைவராகவும், டெரன்சு டி சில்வா, ரொபின் இரத்தினம் ஆகியோர் செயலாளர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர். இரண்டாம் உலகப் போர் ஆரம்பமாகும் வரை இவர்கள் ஆண்டுதோறும் சூரிய மலர் விற்பனையை நடத்தி வந்தனர். "ஒவ்வொரு சூரிய மலரும் ஏகாதிபத்தியம், பாசிசம், போர் ஆகியவற்றுக்கு எதிராகக் குரல் கொடுக்கும்" என்பதே இவ்வியக்கத்தின் இலக்காக இருந்தது. இவ்வியக்கத்தினரால் பெருமளவு பணம் திரட்ட முடியாவிட்டாலும், அன்றைய கால கட்டத்தில் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக இளைஞர்களைத் திரட்ட இவ்வியக்கம் வழிவகுத்தது.

1934 ஆம் ஆண்டில் இலங்கைத் தீவை பெரும் வறட்சி ஆட்கொண்டது. அரிசிக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது. அக்டோபர்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.2 பில்லியன்...

பதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அனர்த்த நிவாரண சேவைகளுக்காக இதுவரை 1.2 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அவசரத் தேவைகளுக்காக மேலும் 30 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

எனவே பணத்தை எந்த விதத்திலும் தடையாகக் கருதாமல் மீட்பு மற்றும் நிவாரண சேவைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மாவட்டச் செயலாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார். (ம-7)

## வடக்கு - கிழக்கு...

அதேவேளை இணைய வசதிகளும் முற்றுமுழுதாகச் செயலிழந்துள்ளன.

இந்நிலையில் பொதுமக்கள் இது தொடர்பில் அச்சம் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள வெள்ள நிலைமைகள், மின்சார துண்டிப்பு, அங்குள்ள இணைய வசதிகளில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்பக் கோளாறுகள் காரணமாகவே தொலைபேசிகள் செயலிழந்துள்ளன.

இந்த விடயங்கள் தொடர்பில பொதுமக்கள் பீதியடைய வேண்டாம் என வலியுறுத்தப்பட்டுள்ளது. (ம-7)

## உயர்தரப் பரீட்சை...

களும் மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக இலங்கைப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இந்திகா லியனகே அறிவித்துள்ளார்.

இதற்கமைய அடுத்த சில நாட்களுக்கு உயர்தரப் பரீட்சை நடத்தப்பட மாட்டாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடு முழுவதும் உள்ள பரீட்சை நிலையங்களை அண்மித்த பாடசாலைகள் மற்றும் பிரதான வீதிகள் வெள்ளம் மற்றும் மண்சரிவுகளால் தடைப்பட்டுள்ள நிலையில், மாணவர்கள் மற்றும் பணியாளர்களின் சிரமங்களைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

அதன்படி டிசம்பர் 05ஆம் திகதி வரை நடைபெறவிருந்த உயர்தரப் பரீட்சை இவ்வாறு மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மேலும், 12ஆம் தர மாணவர்களுக்காக டிசம்பர் 06ஆம் திகதி நடைபெறவிருந்த பொதுத் தகவல் தொழில்நுட்பப் பரீட்சையும் மறு அறிவித்தல் இன்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சிரமங்கள் மற்றும் தடைகளால் மன அழுத்தத்தில் உள்ள இந்த நேரத்தில் மாணவர்கள் மற்றும் பணியாளர்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக இந்திகா லியனகே மேலும் கூறினார்.

இருப்பினும் இந்த இரண்டு பரீட்சைகளும் இயல்பு வாழ்க்கை சீரடைந்தவுடன் நடத்தப்படும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார்.

உயர்தரப் பரீட்சைக்கான திருத்தப்பட்ட திகதிகள் பரீட்சைகள் திணைக்களத்தால் விரைவில் அறிவிக்கப்படும் என்றும் அவர் ஊடகச் சந்திப்பில் தெரிவித்தார்.

உயர்தரப் பரீட்சைக்கான விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் 14 மாவட்டங்களில் உள்ள 15 நிலையங்களில் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், மோசமான வானிலை காரணமாக அந்த மதிப்பீட்டுப் பணிகளும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் கூறினார்.

அத்துடன் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தால் நவம்பர் 29, 30 ஆகிய இரு தினங்களில் நடத்தப்படவிருந்த ஆட்சேர்ப்புப் பரீட்சைகள் மற்றும் வினைத்திறன் தடைதாண்டும் பரீட்சைகளும் மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

அந்தப் பரீட்சைகள் நடைபெறும் திகதிகள் விரைவில் அறிவிக்கப்படும் என்றும் பரீட்சைகள் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-7)

## நிவாரணப்...

இலங்கையில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்கவென இந்தியா அவசர மனிதாபிமான உதவிகளை அனுப்பி வைத்துள்ளது.

மனிதாபிமான நிவாரணப் பொருட்களுடன் இந்தியக் கடற்படையின் விக்ரான்ட், உதயகிரி ஆகிய கப்பல்கள் கொழும்பு வந்துள்ளன.

அவற்றில் 6.2 மெட்ரிக் தொன் உலருணவுப் பொருட்களும் உடனடியாக உண்ணக்கூடிய உணவுப்பொருட்களும் வந்துள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## சீரற்ற வானிலை...

தளப் பக்கத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் பாதிக்கப்பட்ட அனைத்துக் குடும்பங்களின் பாதுகாப்பு, ஆறுதல் மற்றும் விரைவான இயல்பு நிலைக்காகப் பிரார்த்திப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் மிக நெருங்கிய கடல்சார் அண்டை நாடான இலங்கைக்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாக, இந்தியா உடனடியாக சாகர் பந்து நடவடிக்கையின் கீழ் அவசர நிவாரணப் பொருட்களையும், அத்தியாவசிய மனிதாபிமான உதவி மற்றும் அனர்த்த நிவாரண ஆதரவையும் அனுப்பி வைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிலைமைக்கு ஏற்ப மேலும் உதவிகளையும், ஆதரவையும் வழங்க இந்தியா தயாராக உள்ளது என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

இந்தியாவின் "அண்டை நாடுகளுக்கே முதலிடம்" என்ற கொள்கை மற்றும் "விஷன் மகாசாகர்" வழிகாட்டுதலின்படி, இலங்கையின் தேவைப்படும் நேரத்தில் இந்தியா உறுதியுடன் துணை நிற்கிறது என்றும் பிரதமர் நரேந்திர மோடி தனது பதிவில் வலியுறுத்தியுள்ளார். (ம-7)

## இந்தக் கடின...

வரும் செயற்திறனுடன் ஒன்றிணைந்து செயற்படுவோம்" என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி மக்கள் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற கால நிலை காரணமாக ஏற்பட்டுள்ள அவசரகால அனர்த்த நிலைமையில் மேற்கொள்ள வேண்டிய எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி மக்கள் பிரதிநிதிகளுடன் நேற்று வெள்ளிக்கிழமை (28) முற்பகல் முப்படை பாதுகாப்புத் தலைமையகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் பங்கேற்றபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள ஆபத்தான நிலைமை மற்றும் நிவாரண நடவடிக்கைகளை செயற்திறனுடன் முன்னெடுப்பதற்காகத் தேவைப்பட்டால் அவசரகால சட்டத்தை அமுல்படுத்துமாறு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் இதன்போது பரிந்துரைத்ததுடன், அதற்காக முழு ஆதரவையும் வழங்குவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் பணம் தடையல்ல என்று குறிப்பிட்ட, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, ஏற்கெனவே அனர்த்த முகாமைத்துவ மாவட்டக் குழுக்களைக் கூட்டியுள்ளதாகத் தெரிவித்ததுடன், தேவைக்கேற்ப செலவழிக்க மாவட்டச் செயலாளர்களுக்கு ஏற்கெனவே நிதி விடுவிக்கப்பட்டுள்ளது என்றும் எந்த சுற்றறிக்கையும் அந்த நிதியை செலவிடுவதைத் தடுக்காது என்றும், அவ்வாறு ஏதேனும் தடைகள் இருந்தால், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் ஒப்புதலுடன் நிதியைச் செலவிடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மேலும், நிவாரணக் குழுக்களுக்கு பிரவேசிக்க முடியாத இடங்களில் சிக்கியுள்ள மக்களை மீட்பதற்குத் தேவையான ஹெலிகொப்டர்களை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த ஜனாதிபதி, மக்களை மீட்பதற்கு தேவைப்பட்டால் ஹெலிகொப்டர் வசதிகளை வழங்க இந்திய உயர்ஸ்தானிகராலயம் இணங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

நிவாரண முகாம்களுக்கு வருகை தந்துள்ள மக்களுக்கும் வீடுகளில் தங்கியுள்ளவர்களுக்கும் வீடுகளுக்கு வெளியே வேறு இடங்களில் உள்ளவர்களுக்கும் சமைத்த உணவு, சுகாதார வசதிகள் உள்ளிட்ட நிவாரண சேவைகளைத் தொடர்ந்து வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்த ஜனாதிபதி, தமது மாவட்டங்களில் நிவாரண சேவைகள் கிடைக்காத பகுதிகள் ஏதேனும் இருந்தால், உடனடியாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்குத் தகவல் வழங்குமாறும் மக்கள் பிரதிநிதிகளிடம் கோரினார்.

மேலும், மேல் மாகாணத்தில் அதிகரித்து வரும் அபாயகர நிலை மைக்கு முகங்கொடுக்கத் தேவையான முன்னெடுப்புகள் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

மக்கள் பிரதிநிதிகள் தமது மாவட்டங்களின் தற்போதைய நிலைமை மற்றும் தேவைகள் குறித்து ஜனாதிபதியிடம் எடுத்துரைத்தனர்.

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி மக்கள் பிரதிநிதிகள், ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா, நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும உள்ளிட்ட அமைச்சின் செயலாளர்கள் மற்றும் அதன் அதிகாரிகள், முப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர் உட்பட பாதுகாப்புப் பிரிவின் சிரேஷ்ட அதிகாரிகள் உள்ளிட்ட பலர் இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர். (ம-7)

## ஏ9 வீதி...

வவுனியாவில் பெய்து வரும் மழையின் காரணமாக ஏ9 வீதி போக்குவரத்து முழுமையாகத் தடைப்பட்டுள்ளது

வவுனியாவில் தொடர்ச்சியாகப் பெய்து வருகின்ற கடும் மழையின் காரணமாக ஏ9 வீதியின் நொச்சிமோட்டைப் பாலப் பகுதியில் வெள்ள நீரானது வீதியை மேவி 3 அடிக்கு மேல் வேகமாக பாய்வதனால் வாகனங்களும் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக வடக்குக்கும் தெற்குக்கும் இடையிலான ஏ9 வீதிப் போக்குவரத்து முழுமையாகத் தடைப்பட்டுள்ளது

வவுனியாவிலிருந்து முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் அப்பகுதிகளிலிருந்து வவுனியா அல்லது தென்பகுதிக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக பல நூற்றுக் கணக்கான வாகனங்கள் இரண்டு பக்கங்களும் நீண்ட வரிசையில் தரித்து நிற்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. பேருந்துகளில் வந்த பயணிகளும் பெரும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

இதேவேளை ஏ9 வீதி போக்குவரத்தினை தடை செய்து தாண்டிக்குளம் மற்றும் பறநாட்டாங்கல் சந்தி ஆகிய பகுதிகளில் பொலிஸார் வீதித் தடை போட்டு அதற்கு அப்பால் வாகனங்கள் செல்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. (ம-7,250)

## நாட்டின் பல...

துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய அவர் தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு மின்சாரத்தை மீட்டெடுப்பது கடினமான பணியாக மாறியுள்ளதாகக் கூறியுள்ளார்.

கிழக்கு, மத்திய மற்றும் வடக்கு மாகாணங்களில் பெரும்பாலான மின் தடைகள் பதிவாகியுள்ளன.

ரந்தெனிகல, ரந்தம்பே மற்றும் மஹியங்கனை இடையேயான 132,000 கிலோவாட் மின் இணைப்பும் உடைந்து விட்டதாகவும், அதை மீட்டெடுக்க முடியாத நிலையை அடைந்துவிட்டதாகவும் கூறியுள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில், கொத்மலை நீர் மின் உற்பத்தி நிலையம் மற்றும் ரந்தம்பே நீர் மின் நிலையம் ஆகியவற்றை மூட வேண்டியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

பல மின் இணைப்புகளை நாங்கள் துண்டித்துள்ளோம். ஏனெனில் மின் கம்பிகள் தண்ணீரில் கசிந்தால், உயிருக்கு ஆபத்தான சூழ்நிலைகள் மற்றும் உபகரணங்களுக்கு சேதம் ஏற்படலாம், எனவே பொதுப் பாதுகாப்புக்காக மின்சாரத்தைத் துண்டிக்க வேண்டியுள்ளது.

தற்போது மின்சார பழுதுபார்ப்புக்காக மட்டுமே இதைப் பயன்படுத்துகிறோம். முன்னுரிமை அடிப்படையில் அத்தியாவசிய இடங்களுக்கு மின்சாரம் வழங்குவது குறித்து நாங்கள் தற்போது பரிசீலித்து வருகிறோம் எனத் தெரிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாவீரர் நாளை முன்னிட்டு பிரித்தானியாவில் ஞக்ஸ்வாட் நகரில் தமிழர் சுயநிர்ணயக் குழுவால் நினைவேந்தல்கள் மேற்கொள்ளப்பட்டன.

## சீரற்ற காலநிலை

# அவசர தொலைபேசி இலக்கங்கள் அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக அவசர நிலைமைகளில் அழைக்க தேசிய மட்டத்திலான அவசர இலக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் (DMC): 117 (அவசர அபாய அறிவிப்புகள் மற்றும் நிவாரண சேவைகள் ஒருங்கிணைப்பு)

பொலிஸ் அவசர அழைப்பு: 119(உயிர் பாதுகாப்பு மற்றும் அவசர பாதுகாப்புத் தேவைகள்)

1990 சுவ செரிய Ambulance சேவை: 1990 (நோயாளிகளை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல)

தீ அணைப்புப் படை: 110 (தீ விபத்துகள் மற்றும் பேரிடர் மீட்பு நடவடிக்கைகள்)

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் (NBRO): 011 258 8946 (மண் சரிவு ஆபத்துகள் அறிவிப்புகளுக்காக)

வானிலைத் துறை: 011 268 6686 (வானிலை முன்னறிவிப்புகள் பெற)

கடற்படை மூலஸ்தானம்: 011 244 5368 (வெள்ளப் பேரிடர் காலங்களில் படகு சேவைகள் மற்றும் மீட்பு)

இராணுவ மூலஸ்தானம்: 113 (அவசர அபாய நிவாரண மற்றும் மீட்பு நடவடிக்கைகள்)

வான்படை மூலஸ்தானம்: 116 (ஹெலிகொப்டர் மூலம் நடைபெறும் மீட்பு சேவைகள்)

ஆகிய இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. (ம-7)

## மாவட்ட அனர்த்த மேலாண்மை தொலைபேசி எண்கள்

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி |
|---|---|
| +94 212 221 676 | +94 212 285 330 |
| +94 773 957 894 | +94 772 320 528 |
| jaffna@dmc.gov.lk | kilinochchi@dmc.gov.lk |
| **மன்னார்** | **முல்லைத்தீவு** |
| +94 232 250 133 | +94 212 290 054 |
| +94 772 320 529 | +94 773 957 886 |
| mannar@dmc.gov.lk | mulativu@dmc.gov.lk |
| **திருகோணமலை** | **நுவரெலியா** |
| +94 262 224 711 | +94 522 222 113 |
| +94 773 957 884 | +94 773 957 879 |
| trincomalee@dmc.gov.lk | nuwaraeliya@dmc.gov.lk |
| **வவுனியா** | **மட்டக்களப்பு** |
| +94 652 227 553 | +94 652 227 701 |
| +94 773 957 892 | +94 773 957 885 |
| vavuniya@dmc.gov.lk | batticaloa@dmc.gov.lk |

## மோசமான காலநிலை

# பாடசாலை மூன்றாம் தவணை ஆரம்பிக்கும் தினம் மாற்றம்

மூன்றாம் தவணையின் இறுதிக் கட்டத்திற்காக பாடசாலைகள் எதிர்வரும் டிசம்பர் மாதம் 16ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சின் செயலாளர் நாலக களுவெவ தெரிவித்தார்.

மூன்றாம் தவணையின் இறுதிக் கட்டத்திற்காக பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் டிசம்பர் 8 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

நாட்டின் தற்போதைய அனர்த்த நிலைமை காரணமாகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக விசேட அறிவிப்பு மூலம் கல்வி அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# அத்தியாவசிய சேவையாக மின்விநியோகம் அறிவிப்பு

மின்சார விநியோகம் உட்பட பல சேவைகள் அத்தியாவசிய சேவையாக அறிவித்து விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.


ஜனாதிபதியினால் இந்த விசேட வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதன்மூலம் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ள ஏனைய சேவைகளில் கனிய எண்ணெய் உற்பத்திப் பொருட்கள், சமையல் எரிவாயு உட்பட எரிபொருள் வழங்குதல் அல்லது விநியோகித்தல் என்பனவும் அடங்குகின்றன.

அத்துடன் வைத்திய சாலைகள், நீர்வழங்கல் மற்றும் பொதுப் போக்குவரத்துச் சேவைகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. (ம-7)


ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## வீட்டுக்கிரியை நடைபெறும் தினம் மாற்றம்



சிற்பக்கலாவாருதி

ந.சற்குருநாதன்

(குரு)

தோற்றம் 03.06.1956 மறைவு 30.10.2025

இன்று சனிக்கிழமை (29.11.2025) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிற்பக்கலாவாருதி ந. சற்குருநாதன்(குரு) ஆச்சாரியாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் காலநிலை சீரின்மையை கருத்தில் கொண்டு நடைபெற மாட்டாது என்பதையும் இந்தக் கிரியைகள் எதிர்வரும் 01.12.2025 திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதையும் அறியத்தருகிறோம். இது தொடர்பில் தங்களுக்கு ஏற்படும் சிரமத்துக்கு மனம் வருந்துவதுடன் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வீட்டுக்கிருத்திய கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

அரசடிலேன், திருநெல்வேலி.

077 808 9782
077 801 0336

தகவல் : குடும்பத்தினர்



சந்நிதியான் திருமண சேவை

special Hindu, RC, உள்நாடு, வெளிநாடு 20 வருட அனுபவமிக்க சேவையில் பதிவுக் கட்டணத்துடன் விண்ணப்பிப்போர் எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.

077 357 3055

வல்வெட்டித்துறை (C-4444)



கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3580/-
11-16 Kg 2610/-
21-22 Kg 2380/-

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery (C-4446)

UK 11Kg - 1420/- France 11Kg - 2170/- Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- Australia 11Kg - 2150/- Italy 11Kg - 2300/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Main Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237



வேலைவாய்ப்பு Voyzant (PVT) Ltd

கனடாவை தலைமையகமாகக் கொண்ட எமது நிறுவனத்தின் யாழ். கிளையிற்கு (Travel Agent) பயிலுனர் அல்லது முன்அனுபவம் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது. உங்களின் சுயவிபரக்கோவையை 05.12.2025 இற்கு முன் எமது முகவரிக்கு, மின் அஞ்சலுக்கு அல்லது whatsapp க்கு அனுப்பி வைக்கவும். (C-4379)

No. 617& 619, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

077 284 9535 / 077 026 9999

Email - suresh.kumar@voyzant.com



வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டை மாவடி மூளாய் றோட் உடுக்கியவளை பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் 7 பரப்பு காணியில் பிரிவிடல் செய்யப்பட்ட நல்ல நிலையில் உள்ள வீட்டுடன் 3 பரப்பு 5 குளி உடைய காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :

: +61401107584 : 077 248 7024 (6019)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் [illegible] என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.11.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.